# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அனைத்துலகத் தேர்வு

# 2017

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 5

சுட்டெண்:

நேரம்: 150 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

## அலுவலகப் பயன்பாட்டுக்கு

| வினா எண் | புள்ளிகள் | 1ம் முறை | 2ம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1 | 30 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 10 | | | |
| 6 | 10 | | | |
| 7 | 05 | | | |
| 8 | 15 | | | |
| | மொத்தப் புள்ளிகள் | | | |

| | |
|---|---|
| 1ம் முறை - பெயர் / ஒப்பம் | |
| 2ம் முறை - பெயர் / ஒப்பம் | |

## 1) பொருத்தமான விடையைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.

1. பூம்புகார் நகரில் பகலில் கூடிய அங்காடி ______________ .

   ( அல்லங்காடி, நாளங்காடி, இரவங்காடி )

2. ஆடற் ______________ மனதுக்கு இன்பம் தரும்.

   ( களை, கழை, கலை )

3. மாதோட்டம் ______________ என அழைக்கப்பட்டது.

   ( மாந்தை, திருமலை, மட்டுநகர் )

4. பேகன் ______________ ப் போர்வை கொடுத்தான்.

   ( மயிலை, மயிலுக்கு, மயிலால் )

5. வாள் + போர் என்பதைச் சேர்த்தெழுதினால்

   ______________ .

   ( வாள்போர், வாட்போர், வாட்ப்போர் )

6. **குறள்:-**

   பொய்யாமை அன்ன புகழில்லை எய்யாமை

   எல்லா ______________ தரும்

   ( அறமும், மறமும், புகழும் )

7. **"இனிமைத் தமிழ்மொழி எமது....."**

   எனத்தொடங்கும் செய்யுளைப் பாடியவர் ______________ .

   ( பாரதியார், கனக சுப்புரத்தினம், இளங்கோவடிகள் )

8. ஆறு கடலோடு கலக்கும் இடம் ______________________ .

( துறைமுகம், பட்டினம், கழிமுகம் )

9. தாமரை ______________________ க் கண்டு மலரும்.

( நிலாவை, கதிரவனை, விண்மீனை )

10. கொடியில் ______________________ மல்லிகைப்பூ அழகாக இருந்தது.

( மலர்ந்த, காய்த்த, காலித்த )

11. நாடுபடு செல்வங்களில் ஒன்று ______________________ .

( யானைமருப்பு, ஆனைந்து, மயிற்பீலி )

12. பின்வருவனவற்றுள் வேறுபட்ட சொல் ______________________ .

( கதிரவன், நிலா, ஞாயிறு )

13. இடுக்கண் களைவதாம் நட்பு... என்பதில் களைவது என்பது ______________________ .

( சேர்ப்பது, அளிப்பது, நீக்குவது )

14. இப்பொழுது நான் தமிழ்மொழித் தேர்வு ______________________ .

( எழுதுகின்றேன், எழுதினேன், எழுதுவேன் )

15. ______________________ இசைவேள்வியில் பாட்டுப் பாடினர்.

( அவை, அவன், அவர்கள் )

16. மன்னாரில் உலகப் புகழ்பெற்ற வணிகப் பொருள் ________________ .

( கூலங்கள், எண்ணெய், முத்து )

17. முல்லைநில மக்கள் ________________________ .

( ஆயர், குறவர், வேளாளர் )

18. மாமல்ல புரத்தைச் சிற்பக்காடாக்கிய மன்னன்

____________________________________ .

( அருண்மொழித்தேவன், இராசராசசோழன், நரசிம்மபல்லவன் )

19. அரசனை "வரப்புயர" என வாழ்த்திய புலவர் ____________________ .

( திருவள்ளுவர், ஔவையார், பாவேந்தர் )

20. மான் நீர் குடித்தது. மான்கள் நீர் ________________________ .

( குடித்தனர், குடிக்கின்றனர், குடித்தன )

21. ஆதிகாலத்தில் செய்திகளை மக்களுக்கு அறிவிக்கப்

பயன்படுத்தப்பட்ட முழவு ________________________ .

( தப்பட்டை, தண்ணுமை, பறை )

22. பறவைகள் ________________________ ப் பறந்தன.

( சாரிசாரியாக, கூட்டங்கூட்டமாக, தன்னந்தனியாக )

23. சென்ற இடமெல்லாம் சிறப்பைப் பெறுபவர் ______________________ .

( கற்றோர், மன்னர், வீரர் )

24. **“இனி நான் துறவி தமிழே என் துணை”**

எனக்கூறியவர் ______________________ .

( இளங்கோவடிகள், சேரன்செங்குட்டுவன், நெடுஞ்சேரலாதன் )

25. பாவேந்தர் குடும்பவிளக்கு என்ற நூலை ______________________ .

( எழுதப்பட்டது, எழுதுவார், எழுதினார் )

26. மட்டக்களப்பு ஈழத்தின் ______________________ த் திசையில் அமைந்துள்ளது.

( மேற்கு, வடக்கு, கிழக்கு )

27. கிளிகள் பழங்களை______________________ த் தின்றன.

( கொத்தி, கொறித்து, கடித்து )

28. பின்வருவனவற்றுள் காட்டுவிலங்கு அல்லாதது

______________________ .

( சிங்கம், புலி, ஆடு )

29. கதிரவனைப் போற்றி நன்றி கூறும் நாள் ______________________ .

( ஆடிப்பிறப்பு, தைப்பொங்கல், மாட்டுப்பொங்கல் )

30. பழுவான பொருட்களைத் தூக்கப் பயன்படும் விலங்கு

______________________ .

( யானை, ஆடு, மான் )

புள்ளிகள் 30

## 2) பந்தியை வாசித்து வினாக்களுக்கு முழுவிடை தருக.

உடல் நலத்திற்கு மிகவும் இன்றியமையாதது உணவும் உடற்பயிற்சியும். நாம் உண்ணும் உணவுகள் ஊட்டச்சத்து நிறைந்தனவாக இருக்கவேண்டும். ஊட்டச்சத்து நிறைந்த உணவுகளில் ஒன்று கீரை. கீரையில் பல வகைகள் காணப்படுகின்றன. முளைக்கீரை, முருங்கைக்கீரை, அகத்திக்கீரை, வல்லாரை, பொன்னாங்காணி எனப்பல வகைகள் காணப்படுகின்றன. கீரை உடலுக்குத்தேவையான கனியுப்புகளை வழங்குகின்றது. அத்துடன் கரிசலாங்கண்ணி, முடக்கொத்தான், தூதுவளை, குப்பைமேனி போன்றன நோய்போக்கும் மூலிகைக் கீரைகளாகவும் பயன்படுகின்றன. இன்றைய இளையோர் பலர் கீரையை அதிகம் விரும்பி உண்பதில்லை. கீரை வகைகளை நாளும் உணவில் சேர்த்துக் கொள்வது அகத்தியமான ஒன்றாகும்.

1. உடல்நலத்திற்கு இன்றியமையாதவை எவை?

_______________________________________________ .

2. ஊட்டச்சத்து நிறைந்த உணவுகளில் ஒன்று எது?

_______________________________________________ .

3. மூலிகைக் கீரை இரண்டின் பெயர்களை எழுதுக.

_______________________________________________ .

4. உடலுக்குத் தேவையான எவற்றை கீரை வழங்குகின்றது?

_______________________________________________ .

5. யார் கீரையை அதிகம் விரும்பி உண்பதில்லை?

_______________________________________________ .

| புள்ளிகள் 10 |
|---|

## 3) கீறிட்ட இடங்களில் மிகப்பொருத்தமான சொல்லை எழுதுக.

| | | |
|---|---|---|
| கேட்கக்கேட்க | மெல்லமெல்ல | நல்லநல்ல |
| உற்றார்உறவினர் | பச்சைப்பசேல் | |

1. நாங்கள் ______________________ நூல்களைத் தேடிக் கற்க வேண்டும்.

2. நெல் வயல்கள் ______________________ எனக் காட்சியளித்தன.

3. குழந்தையின் மழலைமொழியைக் ______________________ இனிமையாக இருக்கும்.

4. காலில் அடிபட்டதால் தமிழினி பள்ளிக்கு ______________________ நடந்து சென்றாள்.

5. எனது ______________________ தாயகத்தில் வாழ்கின்றனர்.

புள்ளிகள் 10

## 4) பாடநூல் வினா ஏழில் ஐந்திற்கு மட்டும் விடை தருக.

1. தொலைத்தொடர்புக் கருவிகள் இரண்டின் பெயர்களைத் தருக.

____________________

____________________

2. கல்வியின் தேவையை வலியுறுத்தி பாவேந்தரால் எழுதப்பட்ட நூல் எது?

____________________

____________________

3. கல்லாலான சங்கிலிகள் காணப்படும் கோவில் எது?

____________________

____________________

4. மட்பாண்டம் செய்வோரை எவ்வாறு அழைப்பர்?

____________________

____________________

5. கருத்துணர்ந்து கற்றறிந்தோர் கேண்மை.... எனத்தொடங்கும் பாடல் எந்நூலில் இடம்பெற்றுள்ளது?

____________________

____________________

6. நானிலங்கள் எவை?

____________________

____________________

7. வீர விளையாட்டுகள் இரண்டின் பெயர்களைத் தருக.

____________________

____________________

புள்ளிகள் 10

5) **தரப்பட்டுள்ள சொற்களைப் பொருத்தமாக வைத்துக் கவிதையை ஆக்குவோம்.**

# குருவி

| | | | | |
|---|---|---|---|---|
| அழைத்து | வயலில் | சிறகை | கொத்தி | பறக்க |

*குருவி குருவி பறந்து வா*

*குட்டிச் ____________________ அடித்துவா*

*கொட்டிக் கிடக்கும் நெல் மணிகளைக்*

*கொத்திக் ____________________ த் தின்ன வா*

*ஆற்று நீரில் குளிக்க வா*

*அழகாய்த் துள்ளிக் குதிக்க வா*

*சேற்று ____________________ அமர வா*

*திறந்த வெளியில் திரிய வா*

*உன்னைப்போல ____________________ வேண்டும்*

*உயரஉயரச் செல்ல வேண்டும்*

*என்னை ____________________ ச் சென்றிடு*

*என் தாயகத்தைக் காட்டிடு*

புள்ளிகள் 10

## 6) கீறிட்ட இடங்களில் மிகப்பொருத்தமான சொல்லை எழுதுக.

| | | |
|---|---|---|
| பயனடைய | உந்துகள் | நூல்களை |
| நாமும் | மின்குமிழ்களை | |

நாட்டில் உள்ள மக்களின் நலன் கருதி அந்நாட்டு அரசினால் வழங்கப்படும் பள்ளிகள், மருத்துவமனைகள், நூல் நிலையங்கள், ________________ போன்றவை பொது உடைமைகளாகும். எங்களுக்கு வெளிச்சம் தருவதற்காக இரவிலே அமைக்கப்பட்ட ________________ உடைப்பது கவலைக்குரியதொன்றாகும். இதனால் இடர்ப்படுபவர்கள் நாங்களே. எங்களின் எதிர்காலம் கல்வியிலேயே தங்கியுள்ளது. அத்தகைய கல்வியினைக் கற்பதற்குத் தேவையான ________________ எல்லோராலும் வாங்கிப் படிக்க முடியாது. அதனாலேயே அரசு நூல் நிலையங்களை அமைத்துப் பெறுமதியான நூல்களையும் அங்கு வைத்துள்ளது. இத்தகைய நூல்களைக் கிழிக்காமல் ________________ பயனடைந்து மற்றவர்களும் ________________ ச் செய்தல் வேண்டும்.

புள்ளிகள் 10

## 7. பந்தியைத் தமிழ்மொழியில் மாற்றி எழுதுக.

Jeg lærer tamilsk på tamilskskolen. Jeg kan lide tamilsk. Tamilsk er mit modersmål. Jeg kan lide at lære tamilsk.

I am learning thamil in thamil school. Thamil language is my mother tongue. That is an old language. I am learning to hear, speak. read and write in thamil.

J'apprends le tamoul dans une école tamoul. Le tamoul est ma langue préférée. C'est ma langue maternelle. J'aime apprendre le tamoul.

Ich erlerne die tamilische Sprache an einer tamilischen Schule. Ich mag die Sprache Tamil. Die tamilische Sprache ist meine Muttersprache. Ich lerne gerne Tamil.

Ik studeer Tamil op Tamilschool. Tamil is mijn lievelingstaal. Tamil is mijn moedertaal. Ik leer Tamil met plezier.

Io studio il Tamil presso una scuola di lingua Tamil. La lingua Tamil è la mia lingua preferita. Il Tamil è la mia lingua madre. Mi piace studiare il Tamil.

Jeg lærer tamil på tamilskolen. Jeg liker tamilspråket. Tamil er mitt morsmål. Jeg liker å lære tamil.

Jag lär mig tamilska i den tamilska skolan. Tamilska är ett språk som jag tycker om. Tamilska är mitt modersmål. Jag lär mig tamilska med vilja.

__________________________________________________________________________

__________________________________________________________________________

__________________________________________________________________________

__________________________________________________________________________

__________________________________________________________________________

__________________________________________________________________________

__________________________________________________________________________

**புள்ளிகள் 05**

**8) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து; 60 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- பாவேந்தர்
- வாய்மை என்ற பாடத்தினைக் கதையாக எழுதுக.
- எனது செல்ல உயிரி.

புள்ளிகள் 15